## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2014

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ்வதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் நிதிய நடவடிக்கைகளது நிர்வாகம் தொடர்பான எனது அறிக்கை கீழே குறிப்பிடப்பட்ட பந்திகளிலும் வருமான மற்றும் செலவினக் கூற்று இணைப்பு 1 ஆகவும் நிதியத்திற்குச் சொந்தமான பண முதலீடுகள் தொடர்பான கூற்று இணைப்பு 2 ஆகவும் காட்டப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

தேசிய கண் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையின் நிர்மாண ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 571,200 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம், முற்பணமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக செலவினமொன்றாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் முதலாவது பகுதிக் கொடுப்பனவின் போது கழிக்கப்பட்டிருந்த ரூபா 79,154 தொகையான நிறுத்திவைத்தல் பணம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

ஹம்பாந்தோட்டை நிர்மாண செயற்திட்டமொன்றிற்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தின் எஞ்சிய ரூபா 10,000 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் பொதுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் xiv ஆம் உப பந்திக்கு முரணாக மாதாந்த சம்பள எல்லையினை மிகைத்து மீளாய்வாண்டில் 25 சந்தர்ப்பங்களில் ரூபா 120,370 தொகை தேசிய கண் வங்கியின் 7 உத்தியோகத்தர்களுக்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி மேலதிக சேவைக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட மிகை ரூபா 49,171,867 ஆக இருந்ததுடன், இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 46,900,783 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 96,072,650 அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. இந்த அதிகரிப்பிற்கு சுகாதார அபிவிருத்தி செயற்திட்ட

செலவினங்கள் ரூபா 115,189,472 இனால் குறைவடைந்தமை பிரதான காரணியாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருநாகல் மாவட்டத்தின் 3000 பார்வை குறைபாடுடைய சிறுவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை வழங்குவதற்கு வெளிநாட்டு அரசொன்றினால் ரூபா 3,044,000 தொகை நன்கொடையளிக்கப்பட்டிருந்ததுடன், உரிய தரப்பினர்களுக்கிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பணிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் பொறுப்பினை கொண்ட அமைச்சின் விஷன் 2020 செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 2,289,402 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், தகுதியுடைய மாணவர்களை இனங்காணும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராதமையால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,103,763 தொகை செலவிடப்பட்டு 891 மாணவர்களுக்கு மாத்திரம் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பௌதீக செயலாற்றல் 30 சதவீதம் மாத்திரமேயாகும்.

(ஆ) பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக 5 செயலமர்வுகளை நடாத்துவதற்கு உலக சுகாதார அமைப்பினால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்த ரூபா 605,000 தொகையில் ரூபா 484,000 தொகை 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி தேசிய மனநல சுகாதார நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய செயலமர்வுகள் 2013 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடாத்தி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 168,110 தொகை செலவிடப்பட்டு 2 செயலமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன

(இ) போலியோ எதிர்ப்பு தொடர்பான ஆய்வொன்றினை மேற்கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு அரசொன்றினால் ரூபா 2,197,150 நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் ஆய்வு 2013 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 செப்தெம்பர் 15 வரையிலும், செயற்திட்டத்தை முடிவுறுத்தி இறுதி ஆராய்ச்சி அறிக்கையினை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கறுப்பு காபன் கற்கைச் செயற்திட்டம் எனும் பெயரிலான 4 வருட ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு அரசொன்றிடமிருந்து கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுகளினுள் ரூபா 10,387,382 தொகை நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இலக்கிடப்பட்ட 475 தாய்மாரை தெரிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு வினாக்கொத்தொன்றினை வழங்கி தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் என்பன 2014 பெப்ரவரி மாதத்தில் பூர்த்திசெய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தெரிவு செய்யப்பட்டிருந்த தாய்மார்களின் எண்ணிக்கை 391 ஆகவும் வினாக்கொத்து வழங்கி தகவல் பெற்றுக்கொண்ட தாய்மாரின் எண்ணிக்கை 341 ஆகவும் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை உறுதிப்படுத்தாமல் தேசிய கண் வங்கியின் தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி உத்தியோகத்தர்களுக்கு

மீளாய்வாண்டில் மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகளாக ரூபா 2,368,622 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 3 வருடங்களிலும் வருடமொன்றில் பொது நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்ததும் சேமிக்கப்பட்டிருந்ததுமான தொகை முறையே 201 சதவீதம், 348 சதவீதம், 164 சதவீதம் மற்றும் 369 சதவீதமாக காணப்பட்டதுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நிதியத்தின் மீதி ரூபா 205 மில்லியன் ஆகும். இந்த பணம் நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார துறையின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்படாமல் பல்வேறு முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) மனநல சுகாதார பயிற்சிக்காக உலக சுகாதார அமைப்பிடமிருந்து மீளாய்வாண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 384,560 தொகையான பணம் பயன்படுத்தப்படாமல் 2015 ஆம் ஆண்டில் அந்த அமைப்பிற்கே திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

ஜாதிக சம்பத லொத்தர் சீட்டொன்றின் விலையினை ரூபா 20 வரை அதிகரித்த பின்னர் அல்லது அந்த லொத்தர் சீட்டின் விற்பனை அதிகரித்ததன் பின்னர் நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்பினை மீள அதிகரிப்பதற்கு கவனத்திற்கு கொள்வதற்கான உடன்பாட்டின் அடிப்படையில் அந்த லொத்தர் சீட்டிலிருந்து நிதியத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பினை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரை குறைப்பதற்கு 2008 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை முறையே 10.6 சதவீதத்தாலும் 16.9 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன், லொத்தர் சீட்டொன்றின் விலை 2008 செப்தெம்பர் மாதத்தில் ரூபா 20 வரை அதிகரித்திருந்தது. எனினும், நிதியத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பினை மீண்டும் அதிகரிப்பதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 5,688,900 செலவில் 150 எண்ணிக்கையான Dengue Igm Elisa 96 Test Kit கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 60 அலகுகள் மற்றும் 90 அலகுகள் முறையே 05 மாதங்கள் மற்றும் 10 மாதங்கள் ஆகிய குறைவான ஆயுட்காலத்தை கொண்டிருந்ததுடன் ரூபா 1,327,410 கிரயமான 35 அலகுகள் காலாவதியாகியிருந்தன. மேலும் ரூபா 1,820,448 கிரயமான 48 அலகுகள் காலாவதியான பின்னர் பாவனைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

இந்த ஒரு பரிசோதனை தொகுதியின் மூலம் 96 பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமெனவும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 5,201 இற்கு தேவையான பரிசோதனை தொகுதிகளின் எண்ணிக்கை 55 மாத்திரமேயாகும். எனினும், அக்காலப்பகுதியினுள் 102 பரிசோதனைத் தொகுதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,782,522 பெறுமதியான 47 பரிசோதனை தொகுதிகள் தொடர்பில் மோசடியொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பதனை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

### 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 நிர்மாணங்கள், பராமரிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கெனப் பெறப்பட்ட ரூபா 5,688,380 கூட்டுத்தொகையான நன்கொடைப் பணம் உரிய செயற்பாடுகளுக்கு

பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அந்த பணம் 06 முதல் 11 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) த சொய்சா மகப்பேற்று வைத்தியசாலையின் மிகப் பழமை வாய்ந்த கட்டிடத்தை நவீனமயப்படுத்தி பராமரிக்கும் நோக்கில் 2004 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த நிதியத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ரூபா 1,761,143 மீதியொன்று காணப்பட்ட போதிலும், சில கட்டிடங்களின் வர்ணந் தீட்டல் மற்றும் யன்னல் திரைச்சீலைகளை இடுதல் போன்ற சிறு செயற்பாடுகள் மாத்திரமே நடைபெற்றிருந்தது. நிதியத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் நிதியத்தை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவுக்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கென 2005 முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 947,101 தொகையான பொதுமக்களது அன்பளிப்புகள் சேகரிக்கப்பட்டு சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த தரப்பினரால் எந்த நிதியினையும் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் படைவீரர்களுக்கு தேவைப்படும் வைத்திய உபகரணங்களைப் பெறுவதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 10,000,000 தொகை மற்றும் வைத்தியர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை மேம்படுத்தல், பொதுமக்களின் சுகாதார செயற்பாடுகள் மற்றும் நீர் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் 2009 ஆம் ஆண்டில் ரூபா 20,000,000 தொகை இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 24,507,112 கூட்டுத்தொகை உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) மொனராகலை வைத்தியசாலைக்கு ஸ்கானர் இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 101,500 தொகை அந்த செயற்பாட்டிற்காக செலவிடப்படாமல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஊ) 2013 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 05 ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் இலங்கை கடற்படைக்கு கையளிக்கப்பட்டு 2014 மே 21 ஆந் திகதி வரையிலும் ரூபா 75,000,000 செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 50,297,406 கிரயத்திற்கு நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 24,702,594 தொகையினை நிதியத்திற்கு மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஔடத முகாமைத்துவ கைநூலின் ஏற்பாடுகளுக்கு இணங்க களஞ்சியங்களில் ஆகக்கூடியது 02 மாதங்களுக்கு போதுமான இருப்பினை மாத்திரம் பேணிச்செல்ல வேண்டுமெனினும், டெங்கு இரசாயன ஆய்வுகூடத்தின் கொள்வனவுகள் தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது 07 மாதங்கள் முதல் 150 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 4,052,680 பெறுமதியான சில பொருட்களின் மிகை இருப்பு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவையான அளவு மற்றும் அவற்றின் ஆயுட்காலம் என்பவற்றை கவனத்திற்கொள்ளாமல், Thermo Read TM Tag DNA Polymerase 1000g வகையான 25 Vials ரூபா 242,500 செலவில் 2013 மார்ச் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் ஒரு அலகு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 232,800 கிரயமான 15 அலகுகள் 2013 ஒக்தோபர் மாதத்திலும் 09 அலகுகள் 2014 மார்ச் மாதத்திலும் காலாவதியாகியிருந்தது.

(ஆ) 2013 மார்ச் மாதத்தில் ரூபா 870,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 Viral Extraction Kits 2013 செப்தெம்பர் மாதத்தில் காலாவதியாகியிருந்தது. அவற்றில் 3 தொகுதி காலாவதியான பின் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 435,000 கிரயமான 05 காலாவதியான அலகுகள் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(இ) கண் படலங்களை சேகரிக்கும் செயற்பாட்டிற்கென கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15,037 கிரயமான பொருட்கள் 2014 மே மாதத்தில் காலாவதியாகியிருந்தது.

(ஈ) ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்பட்டமை காரணமாக 07 வருடங்களிற்கு முன்னர் இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றின் ரூபா 1,372,346 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டிலிருந்து செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களைக் கருத்திற் கொள்ளுமிடத்து சுகாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் செலவினங்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 41.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், காகிதாதிகள் செலவினம் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 70 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே அலுவலக உபகரணம் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல்களுக்காக ஆண்டினுள் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பரப்புகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதி முகாமைத்துவம்
(ஆ) கொள்வனவுக் கட்டுப்பாடு
(இ) செயற்திட்ட செலவினக் கட்டுப்பாடு

**இணைப்பு 01**

**வருமான, செலவினக் கூற்று**

---------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம், செலவினம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | | |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 64,901,840 | | 61,357,280 | |
| நன்கொடை | 151,032,180 | | 162,998,913 | |
| முதலீட்டு வட்டி | 23,080,887 | | 35,699,162 | |
| ஏனைய வருமானம் | 35,616,537 | | 33,244,203 | |
| | | 274,631,444 | | 293,299,558 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாகச் செலவினம் | 2,206,057 | | 2,004,795 | |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 32,000 | | 24,150 | |
| சுகாதார அபிவிருத்திச் செயற்றிட்டச் செலவினம் | 223,221,520 | | 338,410,992 | |
| | | 225,459,577 | | 340,439,937 |
| பற்றாக்குறை / மிகை | | 49,171,867 | | (47,140,379) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | | - | | 239,596 |
| | | 49,171,867 | | (46,900,783) |

இணைப்பு 02

**முதலீட்டுக் கூற்று**

**நிலையான வைப்புக்கள் (மக்கள் வங்கி)**

| சான்றிதழ் இலக்கம் | முதலீட்டுத் திகதி | முதலீட்டுக் காலம் | 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2014 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் | 2014 ஆம் ஆண்டிற்கான பற்றுதல்கள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 865632 | 2013/12/21 | 3 மாதங்கள் | 63,000,000 | - | - | 63,000,000 |
| 865633 | 2013/12/21 | 3 மாதங்கள் | 23,000,000 | - | - | 23,000,000 |
| 865615 | 2013/12/14 | 3 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| 865614 | 2013/12/14 | 3 மாதங்கள் | 20,000,000 | | | 20,000,000 |
| 865616 | 2013/12/14 | 3 மாதங்கள் | 15,000,000 | - | - | 15,000,000 |
| 331419 | 2013/10/08 | 3 மாதங்கள் | 1,500,000 | - | - | 1,500,000 |
| 379711 | 2012/03/14 | 1 வருடம் | 10,000,000 | - | 10,000,000 | - |
| 865606 | 2013/12/05 | 3 மாதங்கள் | 50,000,000 | - | - | 50,000,000 |
| 865627 | 2013/12/21 | 3 மாதங்கள் | 35,000,000 | - | - | 35,000,000 |
| | | | 237,500,000 | - | 10,000,000 | 227,500,000 |

**திறைசேரி உண்டியல்கள் (இலங்கை வங்கி)**

| சான்றிதழ் இலக்கம் | முதலீட்டுத் திகதி | முதலீட்டுக் காலம் | 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2014 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் | 2014 ஆம் ஆண்டிற்கான பற்றுதல்கள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | நாட்கள் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 314 | 2014/02/21 | 350 | 15,863,144 | - | - | 17,540,972 |
| 314 | 2014/12/26 | 182 | 4,816,955 | - | - | 4,863,815 |
| 314 | 2014/08/29 | 182 | 40,038,124 | - | - | 40,477,098 |
| M 13 B - 026845 | 2014/12/29 | 04 | 5,000,000 | 16,000,000 | 5,000,000 | 16,000,000 |
| M 13 B - 026303 | 2014/12/29 | 13 | 9,000,000 | 35,000,000 | 9,000,000 | 35,000,000 |
| | | | 74,718,223 | 51,000,000 | 14,000,000 | 113,881,885 |